
நகரத்தார் குரல்

சமூக, இலக்கிய மாத இதழ்



பாவடிகள் தேன்வழியப் பாடுதற்குப் பழனியப்பன்
சேவடிக்கீழ் வரம்பெற்றாய் சிங்கார வடிவேலா!
காவியமே! அழகம்மை கரம்பற்றும் கவி அரசி!
சேவுகனார் புகழ்போலச் செல்வமுடன் வாழியவே.

மார்ச் 1996

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 15
ஒலி 2

யுவ
மாசி

மார்ச்
1996

வானுலாவும் மதிவந்துலாவும் மதில் மாளிகை
தேனுலாவு மலர்ச்சோலை மல்கும் திகழ் சிக்கலுள்
வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப்பெருமான் அடி
ஞானமாக நினைவார் வினையாயின நையுமே.

- திருஞானசம்பந்தர்

ஆசிரியர்:
வி.என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர்:
எல்.சுந்தரம்

■■■

அலுவலகம்:
108–109, நேதாஜி ரோடு,
அறை எண் 12, மாடி
மதுரை – 625 001.

ஆண்டுச் சந்தா ரூ. 42–00

டெபாசிட் சந்தா ரூ. 300–00

திருமுறை தர்மம்!

தென்னிந்தியாவில் இந்து சமயத்தையும் திருக்கோவில்களையும் பேணிக்காத்து வருபவர்கள் நகரத்தார்களே ஆகும்.

எல்லாத் திருக்கோவில்களிலும் திருமுறைகள் ஓதப் பெற வேண்டும். இதற்கு ஒவ்வொரு கோவிலிலும் ஒரு ஓதுவாமூர்த்தியை நியமனம் செய்யும் தர்மத்தை நகரத்தார்கள் ஏற்க வேண்டும்.

– நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்
(வயிரன்பட்டியில் 7-2-96 அன்று நிகழ்ந்த அருள்நிறை அரங்கத்தில்)

நகரத்தார்கள் பொறுமைசாலிகள்!

நகரத்தார்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இரத்தின வணிகம் செய்து வந்துள்ளனர். மணியும் பொன்னும் அவர்கள் விற்பனை செய்துள்ளனர். அவர்கள் யாருடனும் சண்டை போடுவதில்லை; பொறுமையாய் இருப்பர். இதனால் அவர்கள் எல்லாக் காலங்களிலுமே வணிகத்தில் புகழ்பெற்று விளங்குகின்றனர்.

– முனைவர் சுப.அண்ணாமலை
(வயிரவன்பட்டியில் 8-2-96 அன்று நிகழ்ந்த ஒரு கருத்துக் கோவையில்)

பாராட்டுக்குரிய செயல்!

ஆற்காடு நூற்பாலையின் நிர்வாக இயக்குநரும் மதுரை வடக்கு நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவரும் "நகரத்தார் குரல்" இதழின் வெளியீட்டாளருமான திரு.நடராஜ் அண்ணாமலை அவர்கள் தமது 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழாவையொட்டி பிள்ளையார்பட்டியில் 22-1-96 அன்று தமது செலவில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் உதவியுடன் இரு நகரத்தார் பெண்களுக்குத் திருமணங்களைச் செய்து வைத்திருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய செயலாகும். பணவசதியும் நல்ல மனமும் படைத்தவர்கள் இதுபோல் மணிவிழா, முத்துவிழாக்களில் நமது நகரத்தார் பெண்களுக்குத் தமது செலவில் திருமணங்களைச் செய்து வைக்க முன்வர வேண்டும்.

மேற்படி திருமணத்தை ஒட்டி திருச்சி நகரத்தார் சங்கத் தலைவர் திரு.எம்.செல்லப்பன் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. அப்போது திருவாளர்கள் எம்.செல்லப்பன், ஏ.வி.கே.ஆவிச்சி செட்டியார், எஸ்.ஏ.ஆர்.பழநியப்ப செட்டியார், எஸ்.அண்ணாமலை செட்டியார், எம்.அடைக்கலவன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

திரு.நடராஜ் அண்ணாமலை அவர்களும் தமது துனைவியார் திருமதி சொர்ணம் ஆச்சியுடன் திருமண விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்கள்.

திரு.எம்.செல்லப்பன் திரு.நடராஜ் அண்ணாமலையின் நன்கொடைக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

திருமண விழாவில் சுமார் 500 பேருக்குக் காலையும் மதியமும் விருந்தளிக்கப் பெற்றது.

பெருங்கவிஞர், முனைவர் அர.சிங்காரவடிவேலன்

கவியரங்க மேடைகளில் தலைமை ஏற்கத் தகுதி படைத்த சிலரில் 'அரிசி' என அன்புடன் அழைக்கப் பெறும் பேராசிரியர் முனைவர் அர.சிங்காரவடிவேலன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் கவியரங்க மேடையில் ஏறிவிட்டால் கவி ஊற்றெனப் பெருகிவரும். கடந்த 35 ஆண்டுகளாக இவர்கள் ஏறாத மேடைகள் இல்லை எனலாம்.

பல பெருமைக்குரியவர்களைப் பெற்றெடுத்த ஊர் கண்டனூர். அந்த ஊரைச் சேர்ந்த பெருமைக்குரிய திரு.அர.சிங்காரவடிவேலன் 22-10-1937ல் பிறந்தார். இவரது தந்தையார் அரங்கநாதன் செட்டியார். தாயார்-மீனாட்சி ஆச்சி.

எம்.ஏ.பி.டி. படித்துள்ள திரு. சிங்காரவடிவேலன் எப்போதும் அடக்கமாக இருப்பார்; எளிமையாக இருப்பார்.

ஆசிரியர் பணி

இவர் 1961 முதல் 1964 வரை காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் 1964 முதல் 1972 வரை காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். 1972 முதல் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். பல ஆண்டுகள் மேற்படி கல்லூரியில் துணை முதல்வராகவும் பொறுப்பேற்றுச் செயல்பட்டிருக்கிறார். இவர் 31-10-95 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டாலும் இவரது திறமை, சேவைமீது நம்பிக்கை கொண்டு கல்லூரி நிர்வாகம் இவருக்கு 31-5-96 வரை பதவியை நீட்டித்திருக்கிறது.



காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழா பேரவை நிகழ்ச்சி ஒன்றில் திரு.சேவு.அண. அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமை ஏற்க பெருங்கவிஞர் திரு.அர.சிங்கார வடிவேலன் உரையாற்றும் காட்சி

வழிகாட்டி

திரு. சிங்காரவடிவேலன் 'சங்க இலக்கிய உவமைகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார். இப்பட்டத்தினை மதுரைப் பல்கலைக் கழகம் 1978ல் இவருக்கு வழங்கியிருக்கிறது. காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியில் முது கலைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த முனைவர் ஆர்.சாரங்கபாணி அவர்கள்தான் தன் ஆராய்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தார்கள் எனப் பெருமையோடு கூறுகிறார் இவர்.

தான் முனைவர் வ.சுப. மாணிக்கனாரின் மாணவன் என்றும் அவர் நடத்திய சங்க இலக்கிய தொல்காப்பிய வகுப்புகளும் பண்டிதமணியின் "உரைநடைக் கோவை" நூலில் உள்ள குறுந்தொகைக் கட்டுரையும் தான், தன்னை ஆய்வு நூல் எழுதத் தூண்டின என்றும் கூறுகிறார்.

ஆய்வு

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் உள்ள ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட உவமைகளில் இந்த ஆராய்ச்சியாளர் வரலாற்று உவமை இயற்கை உவமை, மரபு உவமை, தொழில் உவமை என்று இவற்றை வகைப்படுத்திப் பிரித்திருக்கிறார். தொல் காப்பிய உவமைக்குள் எல்லா வகை அணிகளும் அடங்கும் என்பதை இவர் காட்டி இருக்கிறார். தண்டியலங்காரம் என்பது தனித் தமிழ் நூலே என்று உறுதிப் படுத்தியிருக்கிறார்.

எழுத்தாளர்

திரு. சிங்காரவடிவேலன் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் சில: பன்னிரு ஜோதிர்லிங்கத்திருத்தலங்கள், பழநி முருகன் வழிநடை வரலாறு, அபிராமி அந்தாதி (மூலமும் உரையும்), பாரத நாட்டு விஞ்ஞானிகள், நகரத்தார், மருதவாணர் தாலாட்டு, திருக்குறள் தெளிவுரை.

இவர் கல்லூரி ஆண்டு மலரின் இதழாசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். மற்றும் ஏராளமான மணி விழா மலர்களையும் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு விழா மலர்களையும் தயாரித்திருக்கிறார்.

பழநிக்கு வழிநடையாகச் செல்லும் ஆயிரக் கணக்கான பக்தர்களுக்கு இவருடைய வழிநடைப் பாடல்கள் பெருந்துணையாக இருந்து வருகின்றன.

"காளைத் தவிசேலும் கண்ணுதலான் கண்மணியே!
பாளைச் சிரிப்பழகா! பழனிமலை ஆண்டவனே!
ஆளை அளக்காமல் அன்பை அளந்துடனே
வாளை புரள்வயலா வருவாய் இது சமயம்"

என்ற இவரது பாடலைக் கேட்டால் முருகன் பறந்து வர மாட்டானா?



தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி வெள்ளிவிழாவில் பெருங்கவிஞர் திருக்குறள் உரை எழுதியதைப் பாராட்டி திரு. வி.என்.சிடி அவர்கள் 'உரையரசு' எனும் விருது வழங்கிய காட்சி. அருகே திரு.அரசியின் துணைவியார்.



கண்டனூர் சிட்டாள் ஆச்சி உயர்நிலைப்பள்ளித் தாளாளர் திரு. வீ.தெ. வீரப்ப செட்டியார் முனைவர் பட்டம் பெற்றதைப் பாராட்டி அரசி அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கும் காட்சி.

சூர்ப்பனகை பற்றி மண்டோதரி பாடுவதாக இவர் பாடிய பாடல் வரிகள் கம்பனுக்கும் எட்டாத கற்பனையின் அற்புதங்கள்,

"மூக்கறுந்த நாத்தியந்த மூதேவி சூர்ப்பநகை
நாக்கறுந்து போயிருந்தால் நற்றாலி பிழைத்திருக்கும்"

என்ற அடிகள் கண்ணதாசனுக்குப் பிறகும் நகரத்தார்களில் கவியூற்று வற்றவில்லை என்பதைக் கட்டுகிறது.

பிற பணிகள்

இவர் 1980ல் புதுடில்லியில் நடந்த தேசிய கவி சம்மேளனத்தில் தமிழ்நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டார். முன்னாள் ஆளுநர் மேதகு கே.கே.ஷா அவர்களுக்கு மேடை மொழிபெயர்ப்பாளராகத் தமிழக அரசால் நியமிக்கப் பெற்றிருந்தார். 1982ல்

கவிஞர் குழுவோடு மலேயா. சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு இலக்கியச் சுற்றுப் பயணம் செய்தார். 1986ல் தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்குநரின் நல்லாசிரியர் விருது பெற்றார். மதுரைக் காமராஜர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வுக்கு வழிகாட்டியாகச் செயல்பட்டு வருகிறார். அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியின் வெள்ளி விழாவில் 'உரையரசு' என்கிற விருதுப் பட்டயம் பெற்றுள்ளார்.

குடும்பம்

திரு. சிங்காரவடிவேலனுக்கு அழகம்மை ஆச்சி என்கிற மனைவியும் நான்கு புதல்விகளும் இரண்டு புதல்வர்களும் உள்ளனர்.

அடுத்த திட்டம்

கேள்வி: அரசி அவர்களே. தாங்கள் பணியிலிருந்து ஓய்வு பெறப் போகிறீர்கள். அடுத்து தங்கள் திட்டம் என்ன?

பதில்: 31-5-96 க்குப் பிறகு எனது சொந்த ஊரான கண்டனூருக்குக் செல்ல இருக்கிறேன். கடந்த 35 ஆண்டுகளாக நான் கவியரங்குகள் பிற நிகழ்ச்சிகளில் பாடியுள்ள 7.000. 8.000 பாடல்களைத் தொகுத்து ஏழு தொகுதிகளாக 'அரசி கவிதைகள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிடுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். நகரத்தார் பெருமக்களும் மற்றவர்களும் கவிதைத் தொகுதிகளை வாங்கி என்னைப் பெருமைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என் எதிர்காலம் சமுக இலக்கிய. ஆன்மீகத் தொண்டாக அமைய வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

கோவிலூர் ஆதீனத் தலைவர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் அவர்கள் தொடங்கியுள்ள சனாதன தர்ம உலகப் பல்கலைக் கழகப் பணிகளில் என்னைப் பணி கொள்ள இசைந்து ஆசீர்வதித்திருக்கிறார்கள்.

ஆயிரம் கவிதைகளில் ஒரு காப்பியம் பாட வேண்டும் என்பதும். அரிய பெரிய ஒரு மொழி பெயர்ப்பு நூல் வெளியிட வேண்டும் என்பதும். சங்க இலக்கியங்களுக்கு எளிய உரையுடன் கூடிய பதிப்புகள் கொண்டு வரவேண்டும் என்பதும் முருகன் திருவருளால் நான் நிறைவேற்ற நினைத்திருக்கும் திட்டங்களாகும்.

கே: "நகரத்தார் குரல்" பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்: "நகரத்தார் குரல்" நன்றாக நடைபெற்று வருகிறது. எங்கெங்கோ எழும் குரல்களை நம் இனத்தவர் அனைவருக்கும் கேட்கச் செய்கிறது. குரல் எழுப்ப முடியாதவர்களுக்குக் குரல் கொடுத்து வருகிறது. நகரத்தார் இனத்தின் எழுச்சிக்கும். வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் குரல் கொடுக்கும் குரல்வளையாகத் திகழ்கிறது. அண்மையில் "குரல்" வெளியிட்ட 27 நினைவு இதழ்கள் சாதனையின் எடுத்துக்காட்டு. எளியேன் மேலும் வளர மனமார வாழ்த்தி சிறப்பிதழ் வெளியிடும் "நகரத்தார் குர" லுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்திப்பு: **எல்.சுந்தரம்**

திருமணம்

ஒக்கூர் திரு. சி.கரு.சி.கரு.அரு.வீர.சிந்தாமணி செட்டியார் புதல்வி தெய்வானை என்ற மீனாட்சி B.A.க்கும் அரிமழம் திரு.சு.மு.கா.ராம.கோ.இராமசாமிச் செட்டியார் புதல்வன் கோவிந்தன் M.B.A.க்கும் 2-2-96 அன்று ஒக்கூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

நாட்டரசன்கோட்டை திரு. சுப.ராம.லெ.ராமகி. வள்ளியப்ப செட்டியார் புதல்வி வள்ளியம்மை என்கிற சுமதி B.Sc., B.L.I.S.C.க்கும் கண்டனூர் திரு. வயி.அ.வயி. அண்ணாமலை செட்டியார் புதல்வன் வயிரவன் என்ற குமார் B.Com., M.B.A.க்கும் நாட்டரசன்கோட்டையில் 26-1-96 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

பாகனேரி திரு.கண.சிங்காரம் செட்டியார் புதல்வி காந்தி என்ற காந்திமதிக்கும் பட்டமங்கலம் திரு. பெரி.கு.சுப.ராம. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வன் வேலாயுதத்திற்கும் 26-1-96 அன்று பிள்ளையார்பட்டியில் உள்ள நகரத்தார் விடுதியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

காரைக்குடி திரு.கரு.கருப்பன்செட்டியின் புதல்வன் பழநியப்பனுக்கும் இராயவரம் திரு.எல்.ஜோதிராஜன் செட்டியாரின் புதல்வி அழகு மீனாளுக்கும் 7-2-96 அன்று இராயவரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

ஆத்தங்குடி திரு. நா.பழ.அழ. அழகப்ப செட்டியார் புதல்வன் தெட்சிணாமூர்த்திக்கும் கோனாபட்டு திரு. சா.நா.சா. அழ.நாராயணன் செட்டியார் புதல்வி சீதாலெட்சுமிக்கும் 2-2-96 அன்று கோனாபட்டில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

ஒக்கூர் திரு.சி.கரு.சி.ராம.கரு.கரு.இராமநாதன் செட்டியார் புதல்வன் சோமசுந்தரம் என்ற சிவகுமார் B.E (M.B.A.)க்கும் நாட்டரசன் கோட்டை திரு. வெ.க.சுப.சிவ.லெ. சிவராமன் செட்டியார் புதல்வி அபிராமி என்ற சிவகாமிக்கும் 9-2-96 அன்று நாட்டரசன் கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

நாட்டரசன்கோட்டை திரு. பழ.சா. பழநியப்ப செட்டியார் புதல்வன் சுப்பிரமணியன் என்ற சோமசுந்தரம் (M.Com)க்கும் நாச்சியாபுரம் திரு.கண.செ.கண.அண.சுப்பையா செட்டியார் புதல்வி லெட்சுமி B.A.க்கும் 11-2-96 அன்று நாச்சியாபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

கண்டவராயன்பட்டி திரு. சுப.சே.சுப. சேதுராமன் செட்டியார் புதல்வன் கல்யாண சுந்தரத்திற்கும் குழிபிறை திரு. ஆ.மு.செ.சுப. சுப்பையா செட்டியார் புதல்வி நாச்சம்மை என்ற மாலதிக்கும் 2-2-96 அன்று குழிபிறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

◆ ◆ ◆

வயிரவன் கோவிலில் தோரணவாயில் வயிரவர் மண்டபம் திறப்பு விழா!

வயிரவன் கோவிலுக்குச் செல்லும் வழியில் அமைக்கப் பெற்றுள்ள தோரண வாயில், இராஜ கோபுரத்திற்கு முன்னால் அமைக்கப் பெற்றுள்ள வயிரவர் மண்டபம் ஆகியவற்றின் திறப்பு விழா 4-2-96 காலையில் சிறப்பாக நடைபெற்றது. திருப்பணிக் குழுத் தலைவர் திரு. எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார் விழாவிற்குத் தலைமை ஏற்று அவற்றைத் திறந்து வைத்தார்கள். திரு. பெரி. பஞ்சநதம் செட்டியார் வரவேற்றார். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், முனைவர் திரு. ச. மெய்யப்பன், திரு. ஏ. திருநாவுக்கரசு திரு. சொ. கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

அன்று மாலை 5 மணிக்கு வயிரவர் மண்டபத்தில் நிகழ்ந்த முதல் புராணச் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு திரு. எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார் தலைமை ஏற்றார்கள். முனைவர் திரு. ச. மெய்யப்பன் வரவேற்றார். 101 ஆண்டுகளுக்கு முன்பு நடராஜக் கவிராயரால் எழுதப் பெற்ற வயிரவன்கோவில் புராணம் பற்றி திரு. அரு.சோ. அரிய உரையாற்றினார். அவரது பேரன் 10 வயதுச் சிறுவன் திரு. இராம. அருணாசலம் 'இராமவதாரம்' பற்றி உரையாற்றினான்.

கல்கத்தா நகரத்தார் சங்கம்: நிர்வாகிகள் தேர்வு

கல்கத்தா நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றபோது திரு.இராம.பழநியப்பன் தலைவராகவும் திரு.எஸ்.கருப்பன் செட்டி துணைத் தலைவராகவும் திரு.அழ.இராமநாதன் செயலாளராகவும் திரு.எஸ்.வள்ளியப்பன் துணைச் செயலாளராகவும் திரு.சோம.சிங்காரம் பொருளாளராகவும் மற்றும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

கல்கத்தா நகரத்தார் சங்கத்தின் சார்பாக கல்கத்தா வாழ் அனைத்து நகரத்தார்களும் பங்கு கொண்ட பிள்ளையார் நோன்பு விழா பாரதி தமிழ்ச் சங்க வளாகத்தில் 27-12-95 அன்று கொண்டாடப் பெற்றது.

கல்கத்தாவில் அமையப் பெற்றுள்ள ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்குச் சொந்தமான பழம் பெரும் ஸ்ரீ நகரேசுவரர், சிங்கார முருகேசர் திருக்கோவிலுக்குக் கோபுரம் எழுப்பி குட நீராட்டுச் செய்வதென முடிவு செய்யப் பெற்றுள்ளது.

கல்கத்தாவில் அபிஷேக ஆராதனை

கல்கத்தா வாழ் நகரத்தார்கள் ஸ்டிராண்ட் சாலையில் உள்ள நமது நகரச் சிவன் கோவிலில் அமைந்திருக்கும் ஸ்ரீ சிங்கார முருகேசருக்கு தைப் பூசத் திருநாளன்று (4-2-96) அபிஷேக ஆராதனைகள் நடத்தி வழிபாடு செய்தார்கள். அதற்கு ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தின் கல்கத்தா விடுதிக் கிளையிலிருந்து ரூ.750/- நன்கொடை வந்தது. அன்றைய தினம் விழாவில் பங்கு பெற்ற அனைவருக்கும் நகரவிடுதியில் விருந்து அளிக்கப் பெற்றது.

சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் சிந்தனைப் பூங்காவின் 53ஆவது நிகழ்ச்சி 21-1-96 காலை நிகழ்ந்தது. காசிஸ்ரீ திரு. அரு.சோ. வரவேற்றார். திரு. பழநி சிங்காரவேலு 'கம்ப இராமாயணம்' பற்றிச் சிந்தனை உரை நிகழ்த்தினார்.

சிந்தனைச் சோலை

கலாமடம் பாதரக்குடி ஆதீனத்தில் சிந்தனைச் சோலையின் 10ஆம் நிகழ்ச்சி 21-1-96 அன்று பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் தலைமையில் நிகழ்ந்தது. காசிஸ்ரீ திரு. அரு.சோ. வரவேற்றார். புலவர் திரு.அ.மணிவாசகம் திருவாசகம் பற்றி உரையாற்றினார்.

சிவகங்கையில் வழிபாட்டு நிகழ்ச்சி

சிவகங்கையில் பழநிப் பாத யாத்திரைக் குழு சார்பில் 16ஆம் ஆண்டு பஜனை வழிபாட்டு நிகழ்ச்சி 22-1-96 மாலை சிவன் கோவிலில் நடைபெற்றது. திரு. கே. மாணிக்கம் தலைமை தாங்கினார். காசிஸ்ரீ திரு. அரு.சோ. கந்தபுராணம் பற்றி உரையாற்றினார். கவிஞருக்கு திருமதி சந்திரா ஆச்சி பொன்னாடை வழங்கினார்.

பவானியில் அரு.சோ.உரை

தமிழ்நாட்டின் அலகாபாத் என்று கூறப்படும் நகரம் பவானி. ஆறும் காவிரியும் கலக்கின்ற பவானி கூடுதுறை ஆகும். அங்குள்ள ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயத்தின் 55 ஆவது ஆண்டு விழாவில் 23-1-96 மாலை காசிஸ்ரீ திரு. அரு.சோ. 'ஸ்ரீகிருஷ்ணன் தூது' பற்றி உரையாற்றினார்.

பீமரத சாந்தி

உய்யக்குண்டான் சிறுவயலைச் சேர்ந்த 'அருளிசைமணி' திரு. கு.வெ.கு. வெங்கடாசலம் செட்டியார் - திருமதி அழகம்மை ஆச்சியின் பீமரத சாந்தி (70ஆம் ஆண்டு நிறைவு விழா) 30-12-95 அன்று மதுரையில் நடைபெற்றது.

புதிய இளவரசு நியமனம்

காளையார்கோவில் கா.செ.வேதாந்தமடம் மதுரை ஸ்ரீ குட்டைய சுவாமிகள் மடம் இரண்டுக்கும் அரியக்குடி தவத்திரு ஸ்ரீமத் நாராயண சுவாமி அவர்கள் இளவரசாக நியமனம் செய்யப் பெற்றிருக்கிறார்கள். அதனை ஒட்டி கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் முன்னிலையில் 4-2-96 ஞாயிறன்று காலை காளையார் கோவிலில் அபிஷேகம். மகேஸ்வர பூஜை சிறப்பாக நடைபெற்றது. சாதுக்கள். நகரத்தார் பெருமக்கள் இவ்விழாவில் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

கம்பனூரில் குட நீராட்டு விழா

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் கம்பனூரில் உள்ள ஸ்ரீ கோட்டை விநாயகர் மீனாட்சி சுந்தரேசுவரர் சிவன் கோவிலில் 5-11-95 அன்று காலை திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது நாச்சியாபுரம் திரு.வயி.சண்முகம் செட்டியார் குடும்பத்தினர் இக்குடநீராட்டு விழாவை சிறப்புற நடத்தினர்.

மேல்மருவத்தூர் அடிகளார்

மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரைச் சந்திக்கும் பொருட்டு நான் ஒரு தடவை மேல்மருவத்தூர் சென்றிருந்தேன். அடிகளாரிடம் எனது வருகை தெரிவிக்கப்பட்டது. அடிகளார் உத்தரவுடன் அவரது இருப்பிடம் சென்று தரிசித்தேன்; வணங்கினேன்.

என்னை ஆசீர்வதித்து. தனது கரத்தை மூடித் திறந்தார். எனது கரத்தில் ஒரு பேனா விழுந்தது. அப்பேனாவை இன்றும் பத்திரமாக வைத்துள்ளேன்.

பின் அடிகளார் என்னிடம் மதுரையில் ஆதிபராசக்தி மன்றத்தின் சார்பில் மாநாடு. ஊர்வலம். பொதுக்கூட்டம் நடத்திட வேண்டு மென்றார்கள். அந்தப் பணியைச் சிரமேற்கொண்டு செய்வதாகக் கூறினேன். ஏற்பாடுகளைச் செய்துவிட்டு. அடிகளாருக்குத் தகவல் தெரிவித்தேன்.

தவத்திரு அடிகளார் மதுரைக்கு விஜயம் செய்தார்கள். வடக்குமாசி வீதி மேலமாசி வீதி சந்திப்பில் ஆன்மிகக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நானும் பேச அழைக்கப்பட்டிருந்தேன். தவத்திரு அடிகளாரும் மேடையில் அமர்ந்திருந்தார்கள். மேடையில் செவ்வாடைத் தொண்டர் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது. 'மேல் மருவத்தூர் ஆதிபராசக்திக்குப் பின்தான் மற்ற தெய்வங்கள் எல்லாம்' என்று பேசினார். அடுத்து நான் பேச அழைக்கப்பட்டேன்.

பங்காரு அடிகளாரை வணங்கி வரவேற்றுப் பேச்சைத் தொடங்கினேன். "எனக்கு முன்பு பேசிய நண்பர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்திக்குப் பின்புதான் மற்ற தெய்வங்களெல்லாம் எனப் பேசினார். நானும் ஆதி பராசக்தியை வணங்குகிறேன். தெய்வம் ஒன்றுதான். ஆனால் தோற்றங்கள் பல. காஞ்சி காமாட்சி. காசி விசாலாட்சி. மதுரை மீனாட்சி என்றெல்லாம் கூறி வழிபடுகிறோம். சக்தி ஒன்றுதான். மதுரையில் வீற்றிருக்கும் மீனாட்சிதான் மேல்மருவத்தூரில் ஆதி பராசக்தியாகத் திகழ்கிறாள். நான் மதுரை மீனாட்சியையும் வணங்குவேன்; மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியையும் வணங்குவேன். வேளாங்கண்ணி மாதாவையும் வணங்குவேன்."

"உதாரணமாக முதலில் எனக்கு என்னை ஈன்ற தாயைத்தான் தெரியும். பின் மனைவியைத் தெரியும். பின் பிள்ளைகளைத் தெரியும். இவர்களில் யார் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் எனக் கேட்டால் எனக்கு ஈன்ற தாய். உற்ற மனைவி. பெற்ற பிள்ளைகள் ஆகிய மூவருமே முக்கியம் என்பேன். ஒருவரை விடுத்துப் பிரித்துச் சொல்ல மாட்டேன். சொல்லவும் கூடாது."

"அதேபோனறு எனது சிறுவயதில் எனது பாட்டனார் கட்டிய பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பிள்ளையாரை வணங்கினேன்."

"பின் தொடர்ந்து 18 முறை மாலையணிந்து சபரிமலை சென்று அருள்மிகு அய்யப்பனை வணங்கி வருகிறேன்."

"அதனைத் தொடர்ந்து அருள்மிகு அன்னை மீனாட்சிக்குப் பணிபுரிந்து மீனாட்சி அன்னையையும் சொக்கநாதப் பெருமானையும் வணங்கி வருகிறேன். எனவே தெய்வம்

ஒன்றுதான். திருத்தோற்றங்கள் பல'' எனச் சொல்லிப் பேச்சை முடித்து அமர்ந்தேன். உடனே பங்காரு அடிகளார் என்னை அழைத்து. ''உங்கள் கருத்தே என் கருத்து. செவ்வாடைத் தொண்டர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிவிட்டார்'' என்று சொன்னார். அடிகளாரது திருவடிகளை வணங்கி விடைபெற்றேன். மறுநாள் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு அவர் வந்து அன்னையைத் தரிசித்துக் கண்ணீர் வடித்ததைக் கண்ணாரக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தேன். அவர் அனைத்துத் தெய்வங்களும் ஒன்று என்ற கருத்தை உலகிற்கு வலியுறுத்தி வருவதை எண்ணும்போது. அவர் எனக்கு மகானாகக் காட்சி தந்தார்.

(திரு.வி.என். சிதம்பரம் எழுதிய ''நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்'' நூலிலிருந்து)

பரிவட்ட மரியாதை

அருள்மிகு வயிரவன் கோவில் திருப்பணி மற்றும் திருக்குட நன்னீராட்டு விழாவில் அரும்பணியாற்றிய திருப்பணிக் குழுத்தலைவர் திரு. எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார். துணைத் தலைவர்கள் திரு. என்.என். சுவாமிநாதன். திரு. மு.சே.சுப. சுப்பையா செட்டியார். முனைவர் திரு. ச. மெய்யப்பன் செயலாளர் திரு. ஆர்எம். சுப்பிரமணியன் துணைச் செயலாளர்கள் திரு. எம். இராமன். திரு. நா.கு.நா. குமரப்பன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு பெங்களூர் கைலாஷ் ஆசிரமத்தைச் சேர்ந்த தவத்திரு திருச்சி மகா சுவாமிகள் 8-2-96 இரவு யாகசாலையில் தம் செலவில் பரிவட்ட மரியாதை செய்து கௌரவித்தார்கள்.

உங்கள் குரல்

''நகரத்தார் குர''லின் பிப்'96 இதழின் அச்சும் அமைப்பும் சிறப்பாக உள்ளன. கல்வி பற்றிய ஒரு பக்கக் கட்டுரை அருமையாக இருந்தது. விசா பெறுவது பற்றிய கட்டுரையும் அவசியமானதே.

எஸ். இராதாகிருஷ்ணன். சென்னை .

நகரத்தார்களுக்கென மதுரையில் சிவ மடம் ஏற்படுத்தியிருப்பது நல்ல செயல். அதனை ஏற்படுத்தியவர்களைப் பாராட்டுகிறேன்.

சோம. அண்ணாமலை, திருச்சி.

பிப்ரவரி '96 இதழ் சிறப்பாக உள்ளது. 10 வயதுச் சிறுவன் இராமாயணம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்தியது உண்மையிலேயே அதிசயம் தான்.

வீர.கண்ணப்பன், நாட்டரசன்கோட்டை.

திரு. நடராஜ் அண்ணாமலை அவர்களைப் போல் முத்துவிழா. மணிவிழாச் செய்து கொள்பவர்கள் நமது இனப் பெண்களில் சிலருக்கு திருமணங்களைச் செய்து வைப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் திருமணச் சுமை ஓரளவு குறையும்.

எஸ். முருகப்பன், மதுரை.

பிப்ரவரி '96 இதழின் அச்சு. கண்களில் ஒற்றிக் கொள்ளும் வகையில் உள்ளது. வடிவமைப்பும் அற்புதம். இதழ் இதே போல் இருக்கட்டும். நல் வாழ்த்துக்கள்.

ஏஎன். சிதம்பரம், விரையாச்சிலை.

வயிரவன் கோவில் புராணம்

'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் M.A.,B.T.,

சுமார் 101 ஆண்டுகளுக்கு முன்பு நடராசக் கவிராயரால் வயிரவன் கோவில் புராணம் எழுதப்பெற்று. தேவகோட்டை வித்வத் சிகாமணி வீர.லெ.சிந்நயச் செட்டியாரால் புதுப்பிக்கப்பெற்று வெளியிடப் பெற்றது. இப்புராணத்தைக் கேட்பவர் நூறாண்டு வாழ்வர்-பிணியின்றி வாழ்வர்-செல்வத்தோடு வாழ்வர்-நன்மக்கட்பேற்றோடு வாழ்வர் என்று சொல்லப்பட்டுள்ளது.

வயிரவன்பட்டியை நினைத்தால் அற்புதம். சொன்னால் பொருள்; வணங்கினால் இன்பம்; வசித்தால் வீடுபேறு. சூரர்களை அழித்துத் தேவர்களைக் காக்க இங்குள்ள வளரொளிநாதர் வயிரவக் கோலம் கொண்டார்.



பத்மபீடம்-நின்ற கோலம்-அக்கினி முடி-ஆபரண மார்பு-நான்கு கரங்களில் உடுக்கை பாம்பு. சூலம். கபாலம்-நான்கு வேதங்களின் வடிவமாகிய நாய் பின்புறம் - இவ்வாறு வயிரவ மூர்த்தி காட்சி அளிக்கிறார். சூரியன் போல் ஒளி வீசுவதால். கண்களில் கருணை ஒளி பொழிவதால் இவர் 'மார்த்தாண்ட பைரவர்' என அழைக்கப்படுகிறார். மார்த்தாண்டன் என்றால் சூரியன் என்று பொருள்.

இப்புராணத்தில். வயிரவன்பட்டி. பிள்ளையார்பட்டி. இளையாற்றக்குடி. நேமங்கோவில் ஆகிய நான்கு கோவில்களைப் பற்றிய குறிப்புக்கள் இருப்பது பெருஞ்சிறப்பாகும். இத்தலத்தில் தேவர்கள். தேவேந்திரன். சந்திரன். சுக்கிரன். சுதீசி முனிவர் ஆகியோர் வழிபட்டு உய்ந்தனர். பூம்புகார் நகரத்தார் கிரிகரன் வழிபட்டுச் சிறந்தான்.

இங்குள்ள வயிரவர் தீர்த்தம் வயிரவரின் சூலாயுதத்தால் மலையைப் பிளந்து வயிரவர் உண்டாக்கிய சுனைத்தீர்த்தம் ஆகும். இதில் நீராடினால் மகப்பேறு கிட்டும். பலருக்கு இப்பேறு கிடைத்துள்ளது. வயிரவன் கோவிலைச் சுற்றி 40 சதுரமைல்களில் நாய் கடித்தால் விஷம் ஏறாது. வயிரவர் தீர்த்தம் அருகில் உள்ள நெல்லிக்காயைத் தின்று. தீர்த்தம் பருகினால் விஷம் இறங்கும்.

"காதலித்த கோயில் எல்லாம் கனகத்து இழைக்கும் திருவணிகர்" ஆகிய வயிரவன் கோவில் நகரத்தார்கள் "வீதிதோறும் பொன்கிடந்து விளங்கும் வகையில் வயிரவன் நகரை அமைந்துள்ளார்கள்".

"வஞ்சகர் அஞ்சத்தக்க வான்நகை வதனம்வாழி
வெஞ்சமத்து அசுரர் செற்ற வீர அட்டகாசம் வாழி
புஞ்சவல் இருள்வேல் ஓதிப் பொறியினை அடக்கும் நல்லார்
நெஞ்சகம் கவரா நின்ற நிர்வாணக் கோலம் வாழி" என்று வயிரவரையும். ஸ்ரீ வடிவுடை அம்பாள் சமேத வளரொளிநாதப் பெருமானையும் வழிபட்டால் எல்லாப் பேறுகளையும் எய்தலாம்.

கல்வி

இக்காலக்கல்வி நல்வாழ்க்கையை ஒட்டி இராமல், பணம் மட்டும் ஈட்ட வழி உண்டாக்கித் தருவதால், அது மனிதனை உயிர் வாழும் எந்திரமாக மாற்றி வருகிறது. வாழ்க்கையை மாற்றி அமைப்பதுதான் உயர்ந்த கல்வியின் குறிக்கோள்.

படித்துப் பட்டம் பெறுவது மட்டும் போதாது. அது நிறை கல்வி ஆகாது. படிப்புடன் அன்பு, ஆற்றல் அறிவு யாரிடமிருக்கிறதோ அவரே நிறை கல்வியாளர்.

கல்வியின் முழுப் பயன் என்னவென்றால், தன்னை மேலோனாக்கிக் கடவுளைக் கண்டறியச் செய்வதே.

மக்களையும் பொருள்களையும் உள்ளபடி தெரிந்து கொள்ளக்கூடியதே அறிவெனப் படும். அதை வளர்க்கக் கூடியதே கல்வி எனப்படும்.

கல்வி நல்லதையும், கெட்டதையும் செய்யும். நல்வழியில் ஈட்டவும், அறிவு ஆத்ம வ்ளர்ச்சியை உண்டாக்கவும் பயன்படும். ஒருவரை ஏமாற்றிப் பிழைக்கவும், பொய்ப் பத்திரங்களை உண்டுபண்ணவும், பலரை நாசம் செய்யக்கூடிய கருவிகளைக் கண்டு பிடிக்கவும் உதவும்.

கல்வி என்பது எழுத்துப் படிப்புமட்டும் அல்ல. கண்ணினால் பார்த்தும், காதால் கேட்டும், கருத்தால் உணர்ந்தும் கற்றுக் கொள்ளலாம். எழுத்து வாசனையில்லாத வனிடம் கூட உண்மை, தர்மம், சாந்தம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல் முதலிய எல்லா நற்குணங்களும் அமைந்திருக்கும். ஆதலால் அவனைப் படிக்காதவன் அறிவில்லாதவன் என்று தள்ளிவிடக் கூடாது.

கல்வியை அதிகம் கற்கக் கற்கத்தான் படித்தவன் என்னும் அகந்தையும் கூடவே வளரும். அதிகம் படித்தவன் என்னும் அகந்தை வராமல் கற்பவனே உண்மையான கல்வி கற்றவன்.

சிந்தனையைச் சிறக்கச் செய்வது கல்வி. சிறந்த கருத்துக்கள் உள்ள தர்க்கம், கணிதம், தத்துவம், மனநூல், அறிவு நூல், வான ஆராய்ச்சி, பூமி ஆராய்ச்சி முதலிய அறிவை வளர்க்கக்கூடிய நல்ல நூல்களை, மனம் சிதறவிடாமல் படிக்க வேண்டும்.

அறிவு, உடல், உணர்ச்சி மூன்றும் வளர்ச்சியடைந்தால்தான் முழு மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் தரக்கூடிய கல்வியே முழுக் கல்வி ஆகும்.

இப்போது படிப்பவர்களில் பெரும் பாலானவர்கள் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ளப் படிப்பதில்லை. பட்டம் பதவி பெறவும், பணம் ஈட்டவுமே படிக்கிறார்கள். நம் நாட்டில் இப்போதுள்ள கல்வி பணமாக மாற்றக்கூடிய வணிகச் சரக்காகவே மாறிவிட்டது. உடலை ஓம்பப் பணம் ஈட்ட வேண்டியதுதான். ஆனால் உயிரை ஓம்பவும் சன்மார்க்கமான அறிவுக் கல்வியையும் கூடவே கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் உடல் வளர்ச்சி அடையும். ஆனால் உயிர் தளர்ச்சி அடையும் என்பதை நாம் உணர வேண்டும்.

(திரு.சி.யு. நஞ்சப்பா எழுதிய "உலக அனுபவங்கள்" என்ற நூலிலிருந்து)

கண்ணதாசனுக்குப் புகழாரம்!

கவியரசு கண்ணதாசனைக் குடிகாரர் என்றும் பல தகாத செயல்களைச் செய்தவர் என்றும் குறை கூறுகிறார்கள். அவை அவரது சொந்த வாழ்க்கை தொடர்புடையவை. அவரது சொந்த வாழ்க்கை பற்றி, நாம் ஏன் பேச வேண்டும்? நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

அவரது குறைகளைப் பற்றிப் பேசாமல் அவர் இயற்றியுள்ள அருமையான பாடல்களைப் பற்றி, இறவாப்புகழ் பெற்றுள்ள நூல்களைப் பற்றிப் பேசுவோமே!

கவியரசு கண்ணதாசன் கொட்டியதெல்லாம் தமிழ், தமிழ், தமிழ்! அவர் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். அவர் தமிழில் பாடாத பாடல்களே இல்லை. தத்துவம், காதல், நகைச்சுவை, கிராமியம், இறையுணர்வு என்று எதையுமே அவர் விட்டு வைக்கவில்லை.

ஆங்கில மொழிப் பைபிளைத் தமிழில் பாட்டாக இயற்றினார். அவர் உயிரோடு இருந்திருந்தால் முகமதியர்களின் குரானையும் தமிழில் இயற்றியிருப்பார். "கீதை காட்டும் பாதை" என்று பகவத் கீதையைப் பற்றி எழுதினார். "வனவாசம்" என்னும் தலைப்பில் ஒளிவு மறைவின்றி தன் உண்மை வாழ்வை எழுதினார். "அர்த்தமுள்ள இந்து மதம்" என்னும் தலைப்பில் 10 பாகங்கள் எழுதினார்.

கவியரசு கண்ணதாசன் பத்து வயதுப் பாலகனாக இருந்தபோதே மிகுந்த இறை நம்பிக்கையுடையவராக இருந்தார். அவர் தனது பதினெட்டாவது வயதில், தான் பிறந்த ஊரான சிறு கூடல் பட்டியில் பாடல் இயற்றிய போது தன் குல தெய்வமான மலையரசியை நினைவிற் கொண்டு "மலையரசித் தாயே வாழ்த்துவாய் எனை நீயே" என்று தான் தன் பாடல் வரிகளை எழுதத் தொடங்கினார்.

பின்னர் காலத்தின் கோலத்தால் பலருடன் நட்புக் கொண்டு நாத்திகனாக மாறினார். பின்னர் மீண்டும் மனம் மாறி ஆத்திகனாக மாறி பல தெய்வீகப் பாடல்களை இயற்றி இறவாப் புகழ் எய்தினார்.

'மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா வாழ்க்கையில் நடுக்கமா' என்ற பாடலை முப்பதாண்டுகளுக்கு முன்னர் திரைப்படத்திற்காக இயற்றி, மக்கள் மனத்தில் தன்னம்பிக்கையையும் இறை உணர்வையும் தோற்றுவித்தார்.



'போனால் போகட்டும் போடா, இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா' போன்ற தத்துவப் பாடல்களைப் பாடினார்.

காதல் பாடல்களில் 'அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே, இத்திக்காய் காயாதே என்னுயிரும் நீயல்லவோ....' என்றும் 'பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத் துடித்தேன். உனைத் தேன் என நான் நினைத்தேன் இந்த மலைத்தேன் இதுவென மலைத்தேன்' எனத் தேன் சொட்டும் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார்.

—முனைவர் சரஸ்வதி இராமநாதன்

(வேந்தன்பட்டி அருள்மிகு நெய் நந்தீஸ்வரர் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழாவை ஒட்டி 26-1-96 அன்று நடைபெற்ற பட்டி மண்டபத்திற்கு நடுவராக இருந்து பேசியபோது)

தகவல்: திருமதி கலைச்செல்வி இராமநாதன். திருச்சி.

தாம்பாளம் பார்த்தல்

புத்தாண்டுக்கு முதல் நாள் இரவிலேயே ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, பூ, பழ வகைகள், ஒரு ஆழாக்கு அரிசி, பொன் நகை, ஒரு ரூபாய் நாணயம், முகம் பார்க்கும் கண்ணாடி என்று மங்கலமான பொருட்களைத் தயாராக எடுத்து வைத்துக் கொண்டு காலையில் கண் விழிக்குக்கும்போது அந்த மங்கலப் பொருட்களைப் பார்த்தால் புத்தாண்டு முழுவதும் வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பது ஒரு நம்பிக்கை இதற்குத் 'தாம்பாளம் பார்த்தல்' எனப் பெயர்.

வழிபாடும் வாழ்வியலும் !

இறை வழிபாடும் மக்கள் வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று இணைந்ததுதான்.



சிவபெருமான், இரு நாழி நெல்லை அன்னை காமாட்சிக்கு வழங்கினார். காமாட்சி அன்னை அந்த இரு நாழி நெல்லைக் கொண்டு காஞ்சிபுரத்தில் 32 அறங்களைச் செய்து அறம் வளர்த்த நாயகியாக இன்றும் திகழ்கிறார். இதேபோல் நம் வீட்டிலும் பெண்களிடம் சில பல பணிகளை ஒப்படைத்தால் அதை அவர்கள் சிக்கனமான முறையிலும் சிறப்பான வழியிலும் செய்து பெருமையும் புகழும் சேர்ப்பார்கள். இதைத்தான் ஒரு திரைப்படக் கவிஞன்,

"சேர்த்த பணத்தைச் சிக்கனமா, செலவு
பண்ணப்பக்குவமா அம்மா கையிலே
கொடுத்துப்போடு சின்னக் கண்ணு
அவங்க ஆறை நூறு ஆக்குவாங்க
செல்லக்கண்ணு..." என்று பாடுகிறான்

- புலவர் மாமணி மா. முத்துராமன்

(கோட்டையூர் நகரச் சிவன்கோவிலில் 26-1-96 அன்று நடைபெற்ற குடநீராட்டு விழா நேர்முக வர்ணனையில்)

கானாடுகாத்தானில் சுவீகார விழா

செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பேரனும் ராஜா சர்.மு.அ. முத்தையாச் செட்டியார் புதல்வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தருமான டாக்டர் திரு.எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியார் திருமதி சிகப்பி இராமசாமி தம்பதியருக்கு ஒக்கூர் திரு.மு.செ.மு.சே.ரெ. சேக்கப்ப செட்டியார் புதல்வர் திரு. ஐயப்பனை 'முத்தையா' எனப் பெயரிட்டு சுவீகாரம் செய்து கொண்ட விழா கானாடுகாத்தான் செட்டிநாடு அரண்மனையில் 9-2-96 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

தொழிலதிபரும் டாக்டர் திரு.எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியாரின் சிறிய தந்தையாருமான திரு.எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் குமாரராணி திருமதி மீனாமுத்தையா, டாக்டர் திரு. எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியார் திருமதி சிகப்பி இராமசாமி டாக்டர் திரு.ஏ.சி.முத்தையா திருமதி தேவகி முத்தையா ஆகியோர் அரண்மனையிலிருந்து மன்னர்கள் அணியும் தலைப்பாகை மற்றும் அரச குடும்பத்தினருக்கான ஆபரணங்களுடன் புறப்பட்டு எதிரே உள்ள பிள்ளையார் கோவில் பங்களாவிற்கு மேள தாளத்துடன் சென்றனர்.

அங்கு இருந்த திரு. ஐயப்பன் திரு.எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் டாக்டர் திரு.எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியார் திருமதி சிகப்பி இராமசாமி ஆகியோரின் கால்களில் விழுந்து வணங்கினார்.

பிறகு அரச குடும்பத்தினரின் தலைப்பாகை அரச குடும்பத்து பாரம்பரிய நகைகளை அணிவித்து சுவீகாரம் செய்து கொண்டு ஊர்வலமாக அழைத்து வந்து சிம்மாசனத்தில் அமரவைத்தனர்.



டாக்டர் திரு.எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியார் திருமதி சிகப்பி இராமசாமியுடன் சுவீகாரம் செய்து கொள்ளப் பெற்ற திரு. முத்தையா இராமசாமி.



டாக்டர் திரு.எம்.ஏ.எம். இராமசாமி காங்கிரஸ் தலைவர் திரு.ஜி.கே. மூப்பனாருடன் திரு. முத்தையா இராமசாமி.

இவ்விழாவில் செட்டிநாடு அரச குடும்பத்தினர், உறவினர்கள், நகரத்தார்கள், நண்பர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பொறியாளர்கள், கணக்காய்வாளர்கள் அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்கள், ஆலை அதிபர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், துணைவேந்தர்கள், கல்வியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உயர் போலீசு அதிகாரிகள், நாட்டார்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு செல்வன் திரு.முத்தையா இராமசாமியை வாழ்த்தினர்.

டாக்டர் திரு.எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியார், திருமதி சிகப்பி இராமசாமி திருமதி மீனா முத்தையா, திருமதி மற்றும் திரு.மு.அ.மு.மு. அண்ணாமலை ஆகியோர் விருந்தினர்களை வரவேற்று உபசரித்தனர்.

திரு.ஏ.ஆர்.இராமசாமி திரு.எல்.சபாரத்தினம் திரு.ஏ. கணபதி செட்டியார் திரு.கே. சிதம்பரம் திரு.சபா. சிங்காரம் ஆகியோர் விழாவிற்கு வந்திருந்த பெருமக்களை வரவேற்று உபசரித்து விழாச் சிறப்புடன் நடைபெற உதவினர்.

செல்வன் திரு. முத்தையா இராமசாமி அமெரிக்காவில் கம்ப்யூட்டர் துறையில் மேற்படிப்புப் படித்த இளைஞராவார். அவர் வாழ்க வளர்க என "நகரத்தார் குரல்" சார்பில் வாழ்த்துகிறோம்.

லெட்சுமி ஆச்சி பரிசு

1-1-94 முதல் 31-12-95 வரையிலான கால எல்லையில் வெளியிடப் பெற்ற சைவ, சமய, சாத்திர தோத்திரங்கள் பற்றிய சிறந்த நூலுக்கு சேக்கிழார் ஆராய்ச்சி மையம் வழங்கும் L.CT.L.PL. லெட்சுமி ஆச்சி பரிசான ரூ. 2500/- வழங்கப் பெறும். நூலின் இரு படிகளை 10-5-96 க்குள் ஆராய்ச்சி மையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 26-7-96 அன்று சென்னையில் நடைபெறும் சேக்கிழார் விழாவில் பரிசு அளிக்கப் பெறும். நூல்கள் அனுப்பவேண்டிய முகவரி: சேக்கிழார் ஆராய்ச்சி மையம், 19 டாக்டர் நடேசன் சாலை, அசோக் நகர், சென்னை-600 083.

வயிரவன் கோவிலில் குடநீராட்டு விழா

நகரக்கோவில்கள் ஒன்பதில் ஒன்றான அருள்தரும் வடிவுடையம்மை உடனாய அருள் தரும் வளரொளிநாதர், வயிரவ சுவாமி திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 9-2-96 (தைத் திங்கள் 26ஆம் நாள்) வெள்ளிக்கிழமை காலை 9-15 மணிக்கு வேத கோஷங்கள், மங்கள இசை முழங்க ஆயிரக்கணக்கான பக்தர்களின் பக்திப் பெருக்குடன் சிறப்பாக நடைபெற்றது.

திருப்புத்தூர் - காரைக்குடி சாலையில் நகர வயிரவன்பட்டியில் அமைந்துள்ள இந்திருக்கோவிலில் 4-2-96 ஞாயிறன்று அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தன பூஜை, கணபதி ஹோமம், வாஸ்து சாந்தியுடன் பூஜைகள் தொடங்கின. 6-2-96 மாலை, யாக சாலைப் பூஜை தொடங்கி 9-2-96 காலை வரை ஆறு காலம் நடைபெற்றது.

ஓம குண்டங்கள்

யாக சாலையில் சுவாமிக்கு 9 ஓம குண்டங்களும் அம்பாளுக்கு 9 ஓம குண்டங்களும் வைரவருக்கு (பிரதான மூர்த்தி), 9 ஓம குண்டங்களும் விநாயகர், சுப்பிரமணியர், பரிவாரங்கள்,ராஜகோபுரம், விமானங்களுக்கு 12 ஓம குண்டங்களும் ஆக 39 ஓம குண்டங்கள் அமைக்கப் பெற்றிருந்தன.

யாக சாலை

பெங்களூர் கஞ்சனஹள்ளி ராஜராஜேஸ்வரி திருக்கோவிலைச் சேர்ந்த சபேச சிவாச்சாரியாரின் தலைமையில் வயிரவக் குருக்கள், ராஜாக் குருக்கள் மதுரை சி.வேலாயுத பட்டர், கல்யாண சுந்தர பட்டர் ஆகியோர் யாகசாலைப் பூஜைகளில் பங்கு பெற்றனர். மயிலாடுதுறை, கும்பகோணம் திருச்சி, கர்நாடகம் மற்றும் செட்டிநாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட சிவாச்சாரியாரிகள், வேத விற்பன்னர்கள் யாகசாலைப் பூஜைகளில் பங்கு பெற்று வேதங்களை முழங்கினர்.

ஆதீனங்கள் வருகை

திருக்குட நன்னீராட்டு விழாவில் பெங்களூர் கைலாஷ் ஆசிரமத்தைச் சேர்ந்த தவத்திரு திருச்சி மஹா சுவாமிகள், குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல தேசிக சுவாமிகள் கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள், கலா மடம்-பாதரக்குடி ஆதீனம் தவத்திரு இரவீந்திர சுவாமிகள், துலாவூர் ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் காளையார்கோவில் கா.செ.மடாலய அதிபர் தவத்திரு சிவானந்த சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நேர்முக வர்ணனை

குட நீராட்டு விழாவின் போது 'பதிப்புச் செம்மல்' முனைவர் திரு.ச.மெய்யப்பன், 'காசி ஸ்ரீ' திரு.அரு.சோமசுந்தரன் பொற்கிழிக் கவிஞர் பேராசிரியர் திரு. சொ.சொ.மீ. சுந்தரம், முனைவர் திரு. பழ.முத்தப்பன் ஆகியோர் நேர்முக வர்ணனை செய்தனர்.

யாகசாலை ஏற்பாடு

யாகசாலை அமைப்பு, ஏற்பாடுகள் வைதீக காரியங்களை தேவகோட்டையைச் சேர்ந்த திரு. பழ. சோம. கைலாசநாதன் செட்டியார், திரு. கை. திருநாவுக்கரசு செட்டியார், செம்பொன் என்கிற திரு. மு.வீ. அருணாசலம் செட்டியார் ஆகியோர் சிறப்புற நடத்தி வைத்தனர்.

கலை, இலக்கிய, நிகழ்ச்சிகள்

குடநீராட்டு விழாவை ஒட்டி 7-2-96 புதன்கிழமை மாலை கைலாச ஆசிரமம் மகா சன்னிதானம் தவத்திரு திருச்சி மகாசுவாமிகள் முன்னிலையில் கோவிலூர். கலாமடம் பாதரக்குடி. துலாவூர். காளையார்கோவில் ஆதீனங்கள் பங்கு பெற்ற அருள் நிறை அரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. அன்று இரவு இசைப் பேரறிஞர் தருமபுரம் திரு.ப.சுவாமிநாதன் தேவார இன்னிசை வழங்கினார்.

8-2-96 வியாழன் காலை அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர் திரு. ஞானப்பிரகாரம். தருமபுரம் திரு.ப. சுவாமிநாதன் பள்ளத்தூர் திரு. ரத்தினசபாபதி. கும்பகோணம் திரு. லெட்சுமணன் குழுவினர் திருமுறைத் தமிழிசை வழங்கினர்.

அன்று மாலை தமிழாகரர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை தலைமையில் வயிரவர் அரங்கம் நடைபெற்றது. 'இன் தமிழ் காட்டும் இனிய வணிகர்' என்ற பொதுத் தலைப்பில் புலவர்கள். கவிஞர்கள் பங்கு பெற்றுப் பேசினர்.

அன்று இரவு சென்னை நேஷனல் தியேட்டர்ஸின் 'நாடகக் காவலர்' திரு. ஆர்.எஸ். மனோகர் குழுவினரின் "திருநாவுக்கரசர்" என்கிற சரித்திர நாடகம் நடைபெற்றது.

9-2-96 வெள்ளி காலை சொல்லின் செல்வர் திரு. சுகி சிவம் இலக்கியப் பேருரை நிகழ்த்தினார்.

அன்று மாலை 'வாழ்வு மேம்படப் பெரிதும் துணை நிற்பது அருளா. பொருளா?' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன் நடுவர் பொறுப்பேற்கப் பட்டிமண்டபம் நடைபெற்றது.

திரு வீதி உலா

குட நீராட்டு முடிந்த பின் மாலையில் மகா அபிஷேகமும் இரவு திருக்கல்யாணமும் நள்ளிரவு பஞ்சமூர்த்திகள் ஸ்ரீ வயிரவ சுவாமி திரு வீதி உலாவும் நடைபெற்றன.

விருந்து

மிகப்பெரிய அளவில் அமைக்கப் பெற்றிருந்த இரண்டு கொட்டகைகளில் 4-2-96 முதல் 9-2-96 இரவு வரை ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குத் தங்கு தடையின்றி இலவசமாகப் பலகாரம். உணவு வழங்கப் பெற்றது.

இத்திருக்குட நன்னீராட்டு விழாவைச் சுற்று வட்டார மக்களும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்தவர்களுமாக சுமார் ஐம்பதினாயிரம் பேர் பக்திப் பரவசத்துடன் கண்டு களித்தனர்.

இக்குட நீராட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை திருப்பணிக் குழுத் தலைவர் திரு .எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார் (பள்ளத்தூர்). துணைத் தலைவர்கள் திரு. என்.என். சுவாமிநாதன் (கல்லல்). திரு. மு.சே.சுப. சுப்பையா செட்டியார் (பொன்.புதுப்பட்டி). முனைவர் திரு. ச. மெய்யப்பன் (கடியாபட்டி). செயலாளர் திரு. ஆர்எம். சுப்பிரமணியன் (நடராஜபுரம்) துணைச் செயலாளர்கள் திரு. எம். ராமன் (விரையாச்சிலை) திரு. நா.கு.நா. குமரப்பன் (காரைக்குடி) மற்றும் உறுப்பினர்கள் சிறப்புறச் செய்திருந்தனர்.

மண்டலாபிஷேகம்

இதன் மண்டலாபிஷேக விழா 25-3-96 திங்கட்கிழமை நடைபெறுமென்றும் முனைவர் திரு. ச. மெய்யப்பனாரையும் முனைவர் திரு. சுப. அண்ணா மலையாரையும் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு தயாராகிவரும் குடநீராட்டுச் சிறப்பு மலர் அன்றைய தினம் வெளியிடப் பெறுமென்றும் தெரிகிறது.

'விசா' பெறுவதில் வெற்றி பெற.....

(தி.இராமநாதன், திருச்சி)



கிட்டத்தட்ட இன்றைக்குச் சுமார் 4 லட்சம் இந்தியர்கள் அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். இவர்கள் அனைவரும் மாணவர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும், வணிக முதலீட்டாளர்களாகவும், சுற்றுலாப் பயணிகளாகவும் சென்று தகுதி மாற்றம் செய்து கொண்டவர்களாகவும் உள்ளனர். உங்களுக்கும் இதுபோன்ற தகுதிகள் உள்ளதா என்று அறிய கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள்.

(1) உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அமெரிக்காவில் உள்ளனரா? (மனைவி, கணவன், குழந்தைகள்)

(2) அமெரிக்கப் பிரஜை அல்லது Green Card உடையவரை திருமணம் செய்து கொள்ளும் திட்டம் உங்களுக்கு உண்டா?

(3) அமெரிக்கப் பண்பாடு, சமூகம், மற்றும், பொருளாதாரம் பயனடையத்தக்க விஞ்ஞான அல்லது கலைப் பாடங்களில் அதிகப்படியான திறமையும் அனுபவமும் உங்களிடம் இருக்கிறதா?

(4) Computer Software Professional Engineer/Chartered Accountant ஆகிய ஏதேனும் ஒன்றில் தாங்கள் நல்ல திறமையும் அனுபவமும் மிக்கவரா?

(5) அமெரிக்காவில் ஏதேனும் ஓர் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பிற்கு உங்களுக்கு இடம் கிடைத்துள்ளதா?

(6) அமெரிக்காவில் எந்த நிறுவனமாவது உங்களுக்கு வேலை கொடுக்கச் சம்மதித்துள்ளதா?

(7) அமெரிக்காவில் மிக அதிகமான அளவு முதலீட்டுடன் தொழில் தொடங்க உங்களுக்குப் பண வசதி உண்டா?

(8) பன்னாட்டு அலுவலகம் ஏதாயினும் ஒன்றில் ஓராண்டு காலத்திற்குமேல் மேலாளர் பதவியோ, அதற்கு மேலான பதவியோ, நீங்கள் இதுவரை வகித்து அந்த நிறுவனம் உங்களை அமெரிக்காவில் உள்ள கிளைக்கு மாற்றத் தயாராக உள்ளதா?

(9) அமெரிக்காவில் நீங்கள் வேலை தேடாமல் வேறுவகை வெளி வருமானத்தால் நிரந்தரமாக வாழ்க்கை நடத்த இயலும் என்ற நிலையில் இருக்கிறீர்களா?

(10) அமெரிக்காவில் உங்கள் சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்கு நீங்கள் தலைவராகக் கருதப்படுவீர்களா?

மேலே உள்ள 10 கேள்விகளில் ஏதேனும் ஒன்றிற்கு 'ஆம்' என்ற பதில் உங்களிடம் இருக்குமானால் நீங்களும் அமெரிக்கா போக முயற்சிக்கலாம்.

நம்புங்கள். உங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

`Non Immigrant Visa' பற்றி இனித் தெரிந்து கொள்வோம். இது 'குடியுரிமை கோரா விசா'. அதாவது அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்க நினைக்காதவர்களுக்கு இது வழங்கப்படுவது. அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் திரும்ப இந்தியாவிற்கே வந்துவிடும் எண்ணம் இருப்பதை நிரூபிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வேலைக்காக. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் இந்த விசா வழங்கப்படுவதால் இதற்கு Immigrant Visa வைப் போன்று ceiling limit மற்றும் waiting period ஏதுமில்லை. இத்தகைய விசாவில் ஒரே ஆண்டில் 183 நாட்கள் அல்லது கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி ஓர் ஆண்டிற்கு 120 நாட்கள் அமெரிக்காவில் இருக்க நேரிட்டால் நீங்கள் Tax resident எனக் கருதப்படுவீர்கள். எனவே அங்கு உங்களுக்குப் பெரும் வருமானம் ஏதேனும் இருந்தால் அது அனைத்தும் USA Income Tax க்கு உட்பட்டது.

'குடியுரிமை கோரா' விசா பலவகைப்படும். அவை:

A1A2	-	வெளிநாட்டு அரசு அலுவலர்கள். விருந்தாளிகள்
B1	-	வணிகப்பயணிகள்
B2	-	சுற்றுலாப் பயணிகள்
C1	-	வெளிநாட்டுப் பயணிகள். இடைத்தங்கல்
D1	-	விமான ஓட்டிகள். மாலுமிகள். மற்றும் விமான.கப்பல் பணி ஆட்கள்
E1E2	-	முதலீட்டாளர்கள்; பெருவணிகர்கள்
F1F2	-	முழுநேர மாணாக்கர்கள்; அவர்கள் மனைவி மக்கள்
G1toG5	-	பன்னாட்டு நிறுவனங்களின் சார்பாளர்கள் - அவர்கள் குடும்பத்தினர்- அவர்கள் வேலையாட்கள்.
H1	-	சிறப்புடைய Skilled & Non Skilled Workers.
H2	-	நிரந்தரமற்ற வேலையாட்கள் (With Labour Certification)
H3	-	நிரந்தரமற்ற பயிற்சியாளர்கள்
I	-	வெளிநாட்டுப் பத்திரிக்கையாளர் பிரதிநிதிகள்
J	-	அரசாங்க மாற்றுமுறைத் திட்டப்படி வேலை, படிப்பு, மற்றும் பயிற்சி பெறுவோர்
K1K2	-	அமெரிக்கப் பிரஜையை திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு வருபவர்கள்.

L1L2 - பன்னாட்டு நிறுவனத்தில் மேலாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்து மாறுதலில் செல்லக் கூடியவர்கள்

M1M2 - பட்டப்படிப்பு அல்லாத வேறு கல்வி பயில வரும் மாணவர்கள்

O1toO3 - விளையாட்டு. விஞ்ஞானம். கலை. ஏதேனும் ஒன்றில் அசாதாரண தேர்ச்சி பெற்றுத் திறமையைக் காட்ட வருபவர்கள். மற்றும் அவர்களின் உதவியாளர்கள்

P1toP4 - பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் - மாற்றுதல் முறையில் வருவோரும். மற்றும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்த வருவோர் குடும்பத்தினர்.

Q - Cultural exchange programme-ல் பயிற்சி பெற வருவோர்

R - சமயச் சார்பில் பிரசார வேலை செய்ய அனுமதிக்கப்பட்டவர்கள்

இவற்றுள் மிகப்பெரும்பாலானோர் உபயோகப்படுத்துவது B1/B2 F1F2/ H1H2 ஆகியவையே. எனவே அவற்றைப் பற்றி இன்னும் விளக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

விசிட்டர் விசாவிற்கு (Business/Tourist) நீங்கள் தகுதியானவரா என்று பார்க்க கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்.

(1) உங்கள் அமெரிக்கப் பயணத்தின் நோக்கம் வணிகம் அல்லது சுற்றுலாவாக உள்ளதா?

(2) உங்களிடம் கேட்கும்போது. அதற்குத் தேவையான பணம் உங்களிடம் இருக்கிறது என்பதை நிரூபிக்க முடியுமா?

(3) 'நான் அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்கமாட்டேன்' -என்று உங்களால் நிரூபிக்க முடியுமா?

(4) நீங்கள் தொற்று நோய்.மனநோய் இல்லாதவராகவும் போதை மருந்துக்கு அடிமையாகாதவராயும் இருக்க வேண்டும்.

(5) கிரிமினல் குற்றங்கள் எதிலும் ஈடுபடாதவராயும் இருத்தல்வேண்டும்.

(6) இதற்குமுன் விசா தோருகையில் தவறான செய்திகளை நீங்கள் கூறி 'விசா' பெற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக் கூடாது.

(7) 6 மாதத்திற்குக் குறையாமல் செல்லுபடியாகக்கூடிய பாஸ்போர்ட் வைத்திருக் கிறீர்களா? (பாஸ்போர்ட் Expiry Date 6 மாதத்திற்குப் பிறகு உள்ளதாக இருக்க வேண்டும்)

இவையனைத்திற்கும் சரியான பதில் உங்களிடம் இருந்தால் நீங்கள் 'விசிட்டர் விசா' பெறத்தகுதி பெற்றவர் ஆவீர்கள். ஏற்கனவே கூறியது போல் B1 விசா என்பது வணிக நோக்கப் பயணவிசா. B2 என்பது சுற்றுலா நோக்கப் பயண விசாவாகும். B1 விசாமூலம்

அமெரிக்காவில் வணிகத்தைச் தொடங்கவோ வேலை தேடவோ செல்ல முடியாது. உங்களுக்கு இந்தியாவில் உள்ள வணிகத்தை முன்னேற்ற ஏதாவது Seminarல் கலந்து கொள்ளவோ, Sample கொண்டுபோய் காட்டி Order எடுக்க, பொருட்களை வாங்க, விற்க, இதுபோன்ற நிரந்தரமற்ற வணிக வேலை நிமித்தம் மட்டுமே செல்லலாம்.

B2 விசா மூலம் சுற்றுலாப் பயணியாக ஊர் சுற்றிப் பார்க்க மட்டுமே செல்லலாம். இத்தகைய விசாவில் Expiry Date கொடுக்கப்பட்டிருக்கும். அல்லது I-94 cardல் அமெரிக்காவில் நுழைந்தவுடன் Expiry தேதி குத்தி விடுவார்கள். சாதாரணமாக 6 மாதத்திற்கு விசா வழங்கப்படும். இது Single Entry type அல்லது Multiple Entry type ஆகவும் இருக்கலாம். Multiple entry typeல் Expiry date முடியும் வரை பலமுறை அமெரிக்காவிற்குள் நுழைந்து விட்டுத் திரும்பி வரலாம். Single Entry typeல் ஒரே ஒருமுறை மட்டும் செல்வதற்குத்தான் செல்லுபடி ஆகும். உங்கள் பாஸ்போர்ட், விசா காலத்தில் காலாவதி ஆகிவிடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வது அவசியம்.

இந்த விசா வாங்க நீங்கள் நேரடியாகச் சென்னையில் உள்ள US Consulate அலுவலகம் சென்று அங்கு Form OF-156, Form 1-134 ஆகிய இரண்டையும் நிறைவு செய்து உங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடனும், பாஸ்போர்ட்டுடனும், தாங்கள் அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்கி விடமாட்டீர்கள் என்பதற்குச் சான்றளிக்கும் வகையில் Documents காட்டத் தயாராக எடுத்துச் செல்ல வேண்டும். அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்காமல் தாயகம் திரும்பி வருவேன் என்பதற்கு எந்த மாதிரி Documents காட்டலாம் என்பதற்குச் சில உதாரணங்கள் தருகிறேன்

(1) திரும்பி வர எடுத்துள்ள Return Ticket

(2) நீங்கள் இந்தியாவில் விட்டுச் செல்லும் சொத்துகள் விவரம்

(3) இந்தியாவில் உங்கள் வரவை நிச்சயமாக எதிர்நோக்கியுள்ள மனைவி மக்கள் விவரம்.

(4) இந்தியாவில் உங்களுக்கு நிரந்தரமாக உள்ள தொழில், வேலை, வருமானம் சொத்து ஆகியவற்றிற்கு அத்தாட்சி.

(5) அமெரிக்காவில் உங்கள் செலவை நண்பர்கள், உறவினர்கள் ஏற்க முன்வந்தால் அதற்கான Sponsorship Form F134.

உங்கள் B1/B2 விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மீண்டும் விண்ணப்பிக்கலாம். Consulate அதிகாரிகள் நிராகரித்ததற்குக் காரணம் சொல்வார்கள்.

......(தொடரும்)



செய்திகள்

வாசிப்பவர்: எல்.சுந்தரம்

◆ அமராவதி புதூர் வயிநாகரம் நாகப்ப அய்யா அவர்கள் தூத்துக்குடியில் 'மீனாட்சி' என்ற பெயரில் கப்பலோட்டினார்கள்.

◆ பொற்கிழிக் கவிஞர் திரு.சொ.சொ.மீ. சுந்தரம் மூன்றாவது ஆண்டாக இந்த ஆண்டு தேவகோட்டையிலிருந்து வழிநடைப் பயணமாக பழநி சென்று நலமுடன் திரும்பியிருக்கிறார்கள்.

◆ நாட்ரசன்கோட்டை அருள்மிகு வெங்கடாசலபதிப் பெருமாள் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா தாது ஆண்டு ஆனி மாதம் 19 ஆம் நாள் (3-7-96) நடைபெற திருப்பணிகள் செய்யப் பெற்று வருகின்றன.

◆ ஒக்கூர் அருள்மிகு சசிவர்ண விநாயகர் திருக்கோவிலின் வருடாபிஷேக விழாவை ஒட்டி 5-2-96 அன்று மேற்படி கோவிலில் அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

◆ கோ.அழகாபுரி அருகிலுள்ள கல்லாங்குடி திருப்பாகத் தீஸ்வரர் ஆலயக் குட நீராட்டு விழா 2-2-96 அன்று நிகழ்ந்தபோது புலவர் மாமணி திரு.மா.முத்துராமன் நேர்முக வர்ணனை செய்தார்.

◆ பம்பாய் நகரத்தார் சங்கத்தின் சார்பாக 23-12-95 முதல் 25-12-95 வரை மூன்று தினங்கள் நகரத்தார் பெருமக்கள் பூனாவைச் சுற்றியுள்ள அஷ்ட விநாயகர் தலங்களுக்குச் சென்று கூட்டு வழிபாடு செய்து திரும்பினர்.

◆ திருப்பரங்குன்றம் நகர விடுதியில் 29-1-96 அன்று மரகத விநாயகருக்கு அபிஷேகமும் தைக் கார்த்திகையை முன்னிட்டு அன்னதானமும் நடைபெற்றது அவற்றை திரு.ஏஎன்.என். நாச்சியப்ப செட்டியாரும் திரு.ஆர்எம். அண்ணாமலையும் உபயமாக வழங்கினர்.

◆ மேலைச்சிவபுரி அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் ஆலயத்தில் 11-12-95 மாலை புலவர் மாமணி திரு.மா. முத்துராமன் திரு.மா.மு. சோலை சுப்பிரமணியன் உபயமாக கார்த்திகை நிறைவுச் சோம வாரம் நடைபெற்றது.

◆ காரைக்குடி வழக்கறிஞர் திரு.மா.முத்தையா திருமதி பொற் கொடியாள் ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா முத்து விலாஸில் 7-4-96 அன்று நிகழவிருக்கிறது.

◆ ஸ்ரீ வில்லிபுத்தூர் வித்துவான் ஸ்ரீ கண்ணன் சுவாமி தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் 14-4-96 முதல் 23-4-96 முடிய 10 தினங்களும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை மகாபாரதம் பற்றி பல தலைப்புகளில் சொற்பொழிவு நிகழ்த்தவிருக்கிறார்.

வேந்தன்பட்டியில் குட நீராட்டு விழா

வேந்தன பட்டியில் நெய் நந்தீஸ்வரர் என அழைக்கப்பெறும் அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 26-1-96 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

யாகசாலைப் பூஜைகள் மற்றும் குட நீராட்டு நிகழ்ச்சிகள் சுவாமிமலை வெங்கட சுப்பிரமணிய சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றன.

குட நீராட்டு விழாவை ஒட்டி 24-1-96 முதல் 27-1-96 வரை காலை. இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளை தாலாட்டுக் கவிஞர் திரு.டி. குமரப்பன் அவ்வப்போது பாக்கள் மூலம் அறிவித்தார்.

தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். இரகுபதி திரு.பழ.சிதம்பரம் செட்டியார் முனைவர் திரு.தமிழண்ணல் திரு.பழநியப்பன் இராமசாமி திரு.பழ.கருப்பையா ஆகியோர் பங்கேற்ற வாழ்த்தரங்கம் நடைபெற்றது.

திருப்பணிக் குழுத் தலைவர் திரு.எல்.என். லெட்சுமணன் செட்டியார். செயலாளர் திரு.ஆர்எம்.எஸ். பொன்னையா செட்டியார். பொருளாளர் திரு.எம்.என். வயித்தியநாதன் செட்டியார் மற்றும் உறுப்பினர்கள் குட நீராட்டு விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர்.

நானும் 'ஆச்சி' தான்!

என் பெயரையும் என் பேச்சையும் என் பழக்க வழக்கங்களையும் பார்த்து என்னை நகரத்தார் வகுப்பைச் சேர்ந்த ஆச்சி என்றே பலரும் நினைக் கிறார்கள். உண்மை அதுவல்ல என்றாலும் நான் உங்கள் பகுதியி லேயே பிறந்து. வளர்ந்து அதுவும் பள்ளத்தூரிலேயே வசித்து வருவதால் என்னையும் 'ஆச்சி' என்று கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி யடைகிறேன்; பெருமைப் படுகிறேன்.

நகரத்தார்கள் சைவத்தைப் பேணியவர்கள். தமிழை வளர்த்தவர்கள். பல நற்பணிகளுக்கு பணத்தை வாரி வழங்கியவர்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை ஏராளமான திருக்கோவில்களுக்குத் திருப்பணி செய்தவர்கள். தொடர்ந்து பல நற்பணிகளையும் செய்து வருபவர்கள். இவற்றை நான் இலண்டனில் கூட கூறியதுண்டு.

முனைவர் சரஸ்வதி இராமநாதன்

(வேந்தன்பட்டியில் 26-1-96 அன்று நிகழ்ந்த நெய் நந்தீஸ்வரர் குட நீராட்டு விழாவை ஒட்டி நடைபெற்ற பட்டி மன்றத்தில்)

திருமணம்

வேந்தன்பட்டி திரு. எ.பெரி. பனையப்பச் செட்டியார் புதல்வன் மாணிக்கம் என்ற சரவணனுக்கும் வேந்தன்பட்டி திரு. ந. பனையப்பச் செட்டியார் புதல்வி அன்னபூரணி என்ற ஸ்ரீதேவிக்கும். 22-1-96 அன்று வேந்தன் பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இறைவழிபாடு!

குடநீராட்டு விழாக்களில் கலந்த கொள்வது மட்டும் பெரிய காரியமன்று; குடநீராட்டு விழாக்காணும் கோவில்களுக்கு அன்பர்கள் நாள் தவறாது சென்று இறைவழிபாடு செய்வதும் முக்கியம். எனவேதான் நமது முன்னோர்கள் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று கூறினார்கள்.

-சுகி சிவம்

(வயிரவன்பட்டியில் **9-2-96** அன்று நடைபெற்ற இலக்கிய அரங்கில்)

NOTICE

Form IV

(See Rule 8)

Statement of ownership and other particulars about "NAGARATHAR KURAL" Monthly, Madurai.

1. Place of Publication	:	108-109, Nethaji Road Madurai-625 001.
2. Periodicity of its Publication	:	Monthly
3. Printer's Name	:	A Palaniappan
Nationality	:	Indian
Address	:	Expo Printers 20, Krishnapuram 4th Cross Street, Madurai-625 009.
4. Name of Editor	:	V.N. Chidambaram
Nationality	:	Indian
Address	:	21, Kamala 2nd Street Chinna Chokkikulam Madurai-625 002.
5. Name and address of Publisher & Owner	:	Nadrajh Annamalai Plot No.377 Anna Nagar Madurai-625 020.

1, Nadrajh Annamalai hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


Date:29-2-96

(Sd) Nadrajh Annamalai

(PUBLISHER)

உ
சிவமயம்

மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
28–11–1930

மறைவு :
16–3–1993

வீர.மு.வீர.ராம. அருணகிரி செட்டியார்

நாட்டரசன்கோட்டை – 630 556
(Deputy Chief Officer-Retired-Indian Overseas Bank Regional Office, Madurai)

என்றென்றும் எங்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்று நிலைத்து நிற்கும் தெய்வத்திற்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

ராம.அரு.மெய்யம்மை ஆச்சி (மனைவி)

அரு. ராமகிருஷ்ணன் (மகன்)
காமாட்சி ராமகிருஷ்ணன்
ராம.செந்தில்நாதன்
ராம.மீனாட்சி
ராம.ராமசாமி

மீனாள் லெட்சுமணன் (மகள்)
நா.சொ.லெட்சுமணன்
லெ.கீதா
லெ.லதா

மற்றும் உறவினர்கள்

48, போஸ் ரோடு, சிவகங்கை–630 560

அருமை நண்பர் அரசி

(காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன்)

சுமார் 50 ஆண்டுகட்கு முன்னோக்கி என் உள்ளம் நகர்கிறது. கண்டனூரில் என் ஆயாள் வீட்டில் இருந்து கண்டனூர் சிட்டாள் ஆச்சி நினைவு உயர்நிலைப் பள்ளியில் படிக்கத் தொடங்கிய காலம். அரசி அவர்கள் என்னைவிட ஒருவயது இளையவர். ஆதலால் என்னைவிட ஒரு வகுப்புக் கீழே படித்துக் கொண்டிருந்தார். என் வகுப்பில் நான் கட்டுரைகள் சிறப்பாக எழுதுவேன். அவரது வகுப்பில் அவர் சிறப்பாக எழுதுவார். எங்கள் வகுப்புக்கு வரும் தமிழாசிரியர்கள் திரு.மு. பழநிவேலு, திரு. மா. சுப்பிரமணியபிள்ளை ஆகியோர் எங்கள் வகுப்பில் எங்களது கட்டுரைகளைத் திருத்தி விமரிசனம் செய்யும்போது, என்னுடைய கட்டுரையையும் ஒரு வகுப்புக் கீழே படிக்கும் அரசி அவர்களின் கட்டுரைத் திறனையும் பாராட்டிச் சொல்வர். இப்படியாக அரசி அவர்களை இளமையிலேயே அறியும் வாய்ப்புக் கிடைத்தது.

நான் விளையாட்டுக் களத்திலும் முன் நிற்பேன்; வெல்வேன்; பரிசுகள் பெறுவேன். அவர் ஓரத்தில் நின்று பார்த்து மகிழ்வார்; பாராட்டுவார். கட்டுரையில் தொடங்கி, கவிதையில் வளர்ந்து, தமிழில் மலர்ந்து பேராசிரியராகி இன்று ஓய்வு பெற இருக்கும் அரசி அவர்கட்கு இனிமேல்தான் பணிகள் நிறைய உள்ளன.

நாங்கள் இருவரும் கலந்து கொண்ட கவியரங்க இலக்கிய நிகழ்ச்சிகள் ஏராளம். 15 ஆண்டுகட்கு முன்பு கண்டனூரில் மழை பொழிவதற்காக மகாபாரதம் விராட பருவம் தொடர் சொற்பொழிவினை இருவரும் இணைந்தே நிகழ்த்தினோம். விழா நிறைவில் மழையும் பொழிந்தது. பெரும்புலமையும், பெருமித உணர்வும், சுதந்திரமனமும் கொண்ட அவர் இனி தொடர்சொற்பொழிவு, ஆன்மீகப் பணிகளில் ஈடுபட வேண்டுகிறேன்.

அவரது பணி நாடெங்கும் படர வேண்டும். உடல்நலம் பெருக வே ண்டும். அதற்காக இறையருளை இறைஞ்சி அவரை வாழ்த்துகிறேன்.



வயிரவன் கோவில் குடநீராட்டு விழாவில் நேர்முக வர்ணனை செய்த திரு. சொ. சொ.மீ. சுந்தரம், முனைவர் திரு. பழ. முத்தப்பன் காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரனுடன் திரு. எஸ்.ஆர்.எம். பழநியப்ப செட்டியார்.



வயிரவன் கோவில் குடநீராட்டு விழாவில் தேவகோட்டை செம்பொன் திரு. மு.வீ. அருணாசலம் செட்டியார் துலாவூர் தவத்திரு ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள், பதிப்புச் செம்மல் முனைவர் திரு. ச. மெய்யப்பன்.

படங்கள்: திரு.கும. வள்ளியப்பன், பலவான்குடி.



'மனிதத் தேனீ' திரு. இரா. சொக்கலிங்கத்தின் சேவைகளைப் பாராட்டி மதுரை இளைஞர் நற்பணிக் குழு சார்பில் டாக்டர் திரு. கு. ஞானசம்பந்தன் 'சிறந்த சமூக சேவகர்' என்கிற விருதினை அவருக்கு வழங்கும் காட்சி. அருகில் திரு. ஆர். பாஸ்கர், திரு. நாகலிங்கம், திரு. மூவேந்திரன். திரு. பொன் மனோகரன் உள்ளனர்.



இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மறைவு: 31-3-1994

முத்து மு. அலமேலு ஆச்சி

பலவான்குடி

பாசத்தால் எங்களை ஆட்கொண்ட அன்பு தெய்வத்திற்கு எங்களது இதய அஞ்சலி

உனது எண்ணங்கள் நிறைவேறப் பாடுபடுவோம்.

முத்து முத்தையா	–	கணவர்
மு. முத்துராமன்	–	மகன்
மு. முத்தையா	–	மகன்
மு. அருணாசலம்	–	மகன்
மு. லெட்சுமணன்	–	மகன்
ச.மு. சிட்டாள்	–	மகள்

மற்றும் பேரன், பேத்திகள்

இறையுணர்வு பற்றி அமைச்சர்!



தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா தலைமையில் அநேகமாக எல்லா ஆலயங்களுக்கும் குட நீராட்டு விழா நடைபெற்றுள்ளது. மக்களின் இறை உணர்வுக்குப் புரட்சித் தலைவியின் அரசு பரிபூரணமான பாதுகாப்புக் கொடுத்துள்ளது. ஆலயங்களுக்கு அனைவரும் சென்று வழிபாடு செய்து இறை உணர்வை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தமிழகத்திலுள்ள கோவில்கள் அனைத்திலும் ஒரு காலப் பூஜையாவது நடைபெற அரசு ஏற்பாடு செய்துள்ளது.

– அமைச்சர் எஸ்.இரகுபதி

(வேந்தன்பட்டியில் 26-1-96 அன்று நடைபெற்ற அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் திருக்கோவில் குட நீராட்டு விழா வாழ்த்தரங்கத்தில்)

நடராஜ் அண்ணாமலையின் மணி விழா

ஆற்காடு நூற்பாலையின் நிர்வாக இயக்குநரும் "நகரத்தார் குரல்" இதழின் வெளியீட்டாளருமான திரு. நடராஜ் அண்ணாமலை - திருமதி சொர்ணம் ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 30-01-96 அன்று பனையப் பட்டியில் சிறப்பாக நடைபெற்றது.

மணிவிழாவில் தமிழக அமைச்சர் திரு. எஸ். இரகுபதி. நீதியரசர். திரு. ஏ.ஆர். லெட்சுமணன் மற்றும் ஆலை அதிபர்கள். தொழிலதிபர்கள். வணிகர்கள். நண்பர்கள் சுழற் குழு. அரிமா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு வாழ்த்தியும் வாழ்த்துப் பெற்றும் சிறப்பித்தனர்.

மணி விழா

தேவகோட்டையைச் சேர்ந்தவரும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியருமான முனைவர் திரு. இராம. கருணாநிதி - திருமதி அலமேலு ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா தேவகோட்டை இராம ஏகம்மை திருமண மண்டபத்தில் 8-3-96 வெள்ளிக் கிழமை காலை நடைபெற இருக்கிறது

காரைக்குடி அரிமா சங்க விழா

காரைக்குடி அரிமா சங்கத்தின் சார்பாக நிறுவனர் நாள் விழாவும் அரிமா திரு. எஸ்.என். நாராயணன் செட்டியாரின் பிறந்த தின விழாவும் 5-2-96 அன்று S.M.S.V. மேனிலைப் பள்ளியில் நடைபெற்றது.

முன்னாள் 324 B3 மாவட்ட ஆளுநர் திரு. என்.எம்.ஆர்.வி. சிவப்பிரசாத் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.

அரிமா திரு. எஸ்.என். நாராயணன் செட்டியாரைப் பாராட்டி திரு. வி.என். சிதம்பரம். திரு. ஏ. திருநாவுக்கரசு. திரைப்பட இயக்குநர் திரு. இராம. நாராயணன். மாவட்ட நீதிபதி திரு எம். மாரியப்பன் ஆகியோர் பேசினர்.

கோவிலூர் சுவாமிகளுக்கு வரவேற்பு

பிரிட்டின். பிரான்சு. ஜெர்மனி. அமெரிக்கா. கனடா ஆகிய நாடுகளில் 75 நாட்கள் சுற்றுப் பயணம் செய்து 25-1-96 அன்று கோவிலூர் திரும்பிய கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளுக்கு கோவிலூர் கல்விக் குழு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது. செயலாளர் காசிஸ்ரீ திரு. அரு.சோ. வரவேற்றுப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துப்பா வாசித்தளித்தார். திரு. திருவாசகம் மாலை அணிவித்தார். புலவர் திரு. முத்துசண்முகம் பழங்கள் வழங்கி கோவிலூர் ஆதீனத்தில் பணிபுரியும் அன்பர்களின் சார்பாக பாமாலை பாடினார். தவத்திரு சுவாமிகள் ஏற்புரை வழங்குகையில் விரைவில் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் கோவிலூர் மடத்தின் கிளை நிலையம் ஏற்படுத்தும் திட்டம் இருப்பது பற்றி அறிவித்தார்கள்.

அடுத்த இதழ்.....

பேராசிரியர். முத்தமிழ் மணி

கதி. சுந்தரம்

அவர்களின் சிறப்பிதழாக

வெளிவருகிறது!

பழநி சங்கத்தில் தைப் பூச விழா

பழநி நகரத்தார் சங்கத்தின் 10 ஆம் ஆண்டு தைப்பூச விழா 4-2-96 மற்றும் 5-2-96 ல் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. பழ. பழநியப்பன் வரவேற்றார். செயலாளர் திரு. நாகப்பன் அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. இராமசாமி பொன்னாடை அணிவித்தார்.

முதல்நாள் நிகழ்ச்சி முனைவர் சரஸ்வதி இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு தொழிலதிபர் பனையபட்டி திரு. நடராஜ் அண்ணாமலை தலைமை தாங்கினார். காசிஸ்ரீ திரு. அரு.சோ.. திரு. சொ.சொ.மீ. சுந்தரம் திருமதி உமையாள் முத்து ஆகியோர் முருகன் பற்றி உரையாற்றினார். திரு. பெரியகருப்பன் நன்றி கூறினார். கண்டனூர்ப் பெரியவர் திரு. பழநியப்ப செட்டியார் விருந்தளித்தார்.

இயற்கை எய்தினார்

காரைக்குடி **திரு. நா.அ.கும.ராம. அண்ணாமலை செட்டியார்** தமது 74 ஆவது வயதில் 7-2-96 அன்று இயற்கை எய்தினார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரரான இவர்கள் 1943ல் தேவகோட்டை நீதிமன்ற எரிப்புப் போராட்டத்தில் பெரும் பங்கு வகித்தவர்கள். இவர்களுக்கு மனைவியும் ஒரு புதல்வரும் ஒரு புதல்வியும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

பிள்ளையார் நோன்பு

நாகப்பட்டினம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் 27-12-95 அன்று மலையீஸ்வரன் சன்னதியில் உள்ள எல்.பி.எல். பைனான்சியர்ஸ் கட்டிடத்தில் பிள்ளையார் நோன்பு விழாக் கொண்டாட்டப் பெற்றது. அவ்வமயம் தலைவர் திரு. அரு. முத்துச் செட்டியார் உதவியுடன் துணைச் செயலாளர் திரு. பழ. சீனிவாசன் 125 பேருக்கு இழை எடுதது்க் கொடுத்தார்.

'பலமான அமைப்பு வேண்டும்'

திருப்பணிகளுக்கும் அறப்பணிகளுக்கும் அள்ளிக் கொடுக்கும் சிறப்புப் பெற்றவர்கள் நகரத்தார்கள். அடக்கத்தை அணிகலனாகக் கொண்டு செயலாற்றும் திறமைமிக்கவர்கள் நகரத்தார்கள். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இப்போது நகரத்தார்கள் வாழ்ந்து வருகின்றனர். நமது சமூகத்தில் 70 சதவீதமானோர் ஏழைகளாக உள்ளனர். இந்த 70 சதவீத மக்களின் உயர்வுக்கு நாம் முயற்சி மேற்கொள்ளவேண்டும். நாம் கோவிலூரில் கூடி ஓர் பலமான அமைப்பை ஏற்படுத்தி நகரத்தார் முன்னேற்றத்திற்கு வழிவகைகள் காணவேண்டும்.

எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார்

(வயிரவன் பட்டியில் 8-2-96 அன்று நடைபெற்ற வயிரவர் அரங்கத்தில்)

கவிஞர்கள் போற்றும் தமிழ்ச் செல்வர்


- தமிழவேள் ச.மெய்யப்பன்

பேராசிரியர் சிங்காரவடிவேலன் புகழ்மிக்க கவிஞர்.சங்கப் புலவர் அனையபெருமித வாழ்வினர். கோடி கொடுத்த கொடைஞர். அழகப்பர் கல்லூரியில் பயின்றவர். மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரிடம் முதுகலை பயின்றவர். சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற சிறப்பினர். புகழ்மிக்க சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் பெருமைமிக்க தமிழ்த்துறையின் பீடுமிக்க தலைவர். பாடஞ்சொல்லுவதில் வல்லவர். பலநூறு கவியரங்குகளில் தலைவராய் வீற்றிருக்கும் வீறுடையவர். தன்மானம் போற்றும் தமிழ்ப்பேராசிரியர். கவிஞர்கள் போற்றும் தமிழ்ச் செல்வர். செல்வர்கள் போற்றும் தமிழ்க்கவிஞர். சங்க இலக்கியப் புலமையும், திருக்குறள் பயிற்சியும் மிக்கவர்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009-ல் அச்சிட்டு நடராஜ் அண்ணாமலை அவர்களால் 108-109, நேதாஜி ரோடு, மதுரை-625 001-லிருந்து வெளியிடப் பெறுகிறது.

ஆசிரியர்: **வி.என். சிதம்பரம்.**

Regd. No. TN/MA/(C) /106 NAGARATHAR KURAL



வயிரவன் கோவிலில்
9-2-96 அன்று குடநீராட்டு விழாச் சிறப்பாக நிகழ்
வயிரவர் விமானத்தில் குன்றக்குடி பொன்னம்பல
சிவாச்சாரியாரும் நிற்பதைப் படத்தில் காணல

க்குத் தெரு
வர்களால்
பெறுகிறது.